மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : சிறிய வியாபாரிகளுடைய கடைகளில் இருக்கும் சாமான்களில் இன்னின்ன பொருட்கள் இன்னின்ன மொத்த வியாபாரியிடமிருந்து வாங்கியவை என்பதற்கான தகுந்த ஆதாரம் இருந்தால், அந்த மொத்த வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு அமைச்சரவர்கள் கலப்படக் குற்றம் செய்யும் வியாபாரிகளுக்கு தண்டனை வழங்குவதுபற்றி பதில் சொன்னார்கள். இதேபோல கலப்படம் செய்யும் உற்பத்தியாளர்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : கலப்படம் செய்கின்ற உற்பத்தியாளர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது பற்றி தனியான கேள்வி கேட்டால், பதில் சொல்ல முடியும்.

Students of Madurai Homoeopathy Medical College

* 29 *Q.*—THIRU D. SANTOSHAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) the steps taken to provide internship for the students of Madurai Homoeopathy Medical College, who passed their final examination in 1974; and

(*b*) the steps taken for registering the students of that College, who got their Diploma from the Tamil Nadu Homoeopathy Council ?

மதுரை ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி மாணவர்கள்

திரு. டி. சந்தோஷம் : மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1974-ல் மதுரை ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் இறுதியாண்டு தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு உட்பயிற்சி (Internship) வழங்க அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

(இ) தமிழ்நாடு ஹோமியோபதி குழுவிலிருந்து டிப்ளமா பெற்றுள்ள மேற்படி மாணவர்களை பதிவு செய்து கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

1978 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : (அ) மதுரையில் இருந்த ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி, தனியாரால் நடத்தப்பட்டதாகும். அக்கல்லூரியில் இறுதியாண்டு (நாலாவதாண்டு) படிப்பின் தரம் சென்னை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் நான்காமாண்டு வகுப்பில் பின்பற்றப்பட்டு வரும் கல்வியின் தரத்தைவிட மிகக் குறைவாக இருந்தது. ஆகையால், அங்கு 4-ம் ஆண்டு படித்த மாணவர்கள் சென்னை அரசு ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியில் நான்காமாண்டு வகுப்பில் மீண்டும் சேர்ந்து படித்துத் தேறினால் அவர்களுக்கு உட்பயிற்சி (Internship) வழங்கப்படும்.

(இ) தமிழ்நாடு ஹோமியோபதி குழுவிலிருந்து பட்டம் பெற்றவர்கள் குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

திரு. டி. சந்தோஷம் : அப்படி அரசாங்கக் கல்லூரியில் 4 ஆம் ஆண்டிலே அவர்கள் உறுதியாகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என்று உத்தரவாதம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்தரராஜன் : இந்திய ஓமியோபதி குழுவினரால் சிபாரிசு செய்யப்பட்டு சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

Co-operative Spinning Mill Workers

* 30 *Q.*—THIRU M. SANKARALINGAM : Will the Hon. the Minister for Handlooms and Textiles be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to remove the disparity in salary paid to the workers working in different Co-operative Spinning Mills in Tamil Nadu;

(*b*) whether the Government have received any representation from the workers that the salary should be paid in a uniform rate; and

(*c*) if so, the action taken thereon ?

கூட்டுறவு நூற்பாலை தொழிலாளர்கள்

திரு. எம். சங்கரலிங்கம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் பஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவு நூற்பாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் சம்பளத்தில், ஆலைக்கு ஆலை இருக்கும் வேறுபாட்டை அகற்ற அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?